

சென்னை சென்ட்ரல் அருகே பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் மெட்ரோ ரயில் பணிகளுக்காக சாலையோரம் இருந்த ஏராளமான கடைகள் அகற்றப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டது. தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டு சாலை குறுக்கப்பட்டதால் வாகனப் போக்குவரத்தும் சிரமத்துக்குள்ளானது. தற்போது பணிகள் முடிவடைந்து மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படவுள்ளது. இதற்காக பூங்கா நகர் ரயில் நிலையம் அருகே மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் பயணிகளின் வாகன நிறுத்துமிடம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. குறுக்கப்பட்ட சாலையும் சீரமைக்கப்பட்டு விரைவில் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட உள்ளது. ரிப்பன் மாளிகை, விக்டோரியா ஹால், மூர்மார்க்கெட் புறநகர் ரயில் நிலையம் மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையம் என பிரம்மாண்ட கட்டிடங்களுடன் பரந்து விரிந்து காணப்படும் சென்னையின் அழகிய தோற்றம். படம்: ம.பிரபு